புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

**தமிழ் இலக்கிய ‘அகம்×புறம்’ மரபும் உளவியலும்**

**கட்டுரையாளர்**

*முனைவர் ஏ. சைலஜா*

*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*

*தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)*

*திருப்பத்தூர் – 635601.*

**முன்னுரை**

தமிழ் இலக்கிய மரபு ‘அகம்×புறம்’ என்று தொடங்குகிறது. புறத்தைவிட அகத்திற்கு மிகப்பெரிய இடத்தைச் சங்க இலக்கியத் தொகுப்பு வழங்கியுள்ளது. சங்க இலக்கியத்தொகுப்பு வழங்குவதற்குரிய இடத்தை அகம் உருவாக்கி வைத்துள்ளது என்றும் புரிந்துகொள்ளலாம். தொல்காப்பியமும் அகத்திற்கு பெரும்பான்மை இயல்களையும் புறத்திற்கு ஒரே ஒரு இயலையுமே ஒதுக்கியுள்ளது. பக்தி இலக்கியங்களும் சித்தர் இலக்கியங்களும் மனம் என்பதற்கு மிகப்பெரிய இடத்தை வழங்கியுள்ளன. அதேநேரம் புறத்தை முற்றிலும் ஒதுக்கிவிடவும் இல்லை. நவீன காலமும் அகத்தையும் புறத்தையும் சமநிலையில் வைத்து அணுகுவதைப் பார்க்க முடிகிறது. சங்க காலத்தில் புறம் போர்ச்செயல்களைச் சார்ந்தும் பக்தி காலத்தில் புறம் கோவில் வழிபாட்டுச் செயல்களைச் சார்ந்தும் சித்தர் காலத்தில் புறம் சமூகப் பழக்கவழக்கங்களைச் சார்ந்தும் நவீன காலத்தில் சமூகம் அரசியல், பண்பாடுகளைச் சார்ந்தும் அமைந்தமையே சான்றாகும். இவ்வாறு அகம் புறத்தினூடே பெரும் இடத்தை உருவாக்கிக்கொண்டு இயங்கியுள்ளது. அகம் வலிமையானது என்றால் புறத்தை ஏன் முற்றிலும் ஒதுக்கவில்லை? புறம் வலிமையானது என்றால் அகத்தை ஏன் தன்வயப்படுத்தவில்லை? மாறாக, இரண்டையும் இணைத்தே தமிழ் இலக்கிய மரபு

பயணித்து வந்துள்ளது? இக்கேள்விகளுக்கு அகமும் புறமும் இலக்கியத்தின் இருபிரிவுகள் என்னும் புரிதல் தமிழ் இலக்கிய மரபிற்கு இருந்துள்ளது. அதற்கு உளவியல் சிந்தனை தமிழ் இலக்கிய மரபினூடே பயணித்து வந்தமை காரணமாக இருக்கலாம் என்ற தற்காலிக விடையை உருவாக்கிக்கொண்டு இக்கட்டுரை பயணிக்கிறது. இக்கட்டுரைக்கு முன்னோடி ஆய்வாக, அரங்க. நலங்கிள்ளி எழுதிய 'சங்க இலக்கியம் : ஒரு ஃபிராய்டிய உளப்பகுப்பாய்வு வாசிப்பு' என்னும் நூல் அமைகிறது. ஆய்வுக் கட்டுரை தமிழ் இலக்கிய 'அகம்×புறம்' மரபையும் ஃபிராய்டிய உளப்பகுப்பாய்வியலையும் ஒப்பிட்டு அமைவதால் ஒப்பாய்வு அணுகுமுறை ஆய்வு அணுகுமுறையாகப் பின்பற்றப்படுகிறது.

**சங்க இலக்கிய அக மரபும் உளவியலும்**

அக இலக்கியங்கள் ஐந்திணைகளாலும் மூவகைப் பாடுபொருள்களாலும் ஆனவை. முதல், கரு, உரி ஆகிய பாடுபொருள்களில் முதல்பொருள் நிலமும் காலமும் சார்ந்தது. கருப்பொருள் காலத்தின் அடிப்படையிலும் நிலத்தின் அடிப்படையிலும் உருவாகும் பொருள்கள் சார்ந்தவை. உரிப்பொருள் நிலத்திலும் காலத்திலும் அமையும் மனித வாழ்வியல் சார்ந்தது. அவ்வாழ்வியல் மனத்தின் அடிப்படையில் அமையும் காமம் சார்ந்தது. எனவே உரிப்பொருள் என்பது மனப்பொருளாகும். இதை, "உரிப்பொருள் = மனப்பொருள்" (நலங்கிள்ளி: 2019-1) என்ற வரி உணர்த்துகின்றது. தொல்காப்பியம், "உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே" (தொல்.பொருள்.15) என்று உரிப்பொருளுக்கு முதன்மை கொடுத்து அமைகின்றது. முதற்பொருள், கருப்பொருள் இல்லாமல் கூட அக இலக்கியங்கள் அமையக்கூடும். ஆனால் உரிப்பொருள் இல்லாமல் சங்க அகப்பாடல்கள் இல்லை. இப்பாடல் அமைப்பிலிருந்து உரிப்பொருள் முதன்மையானவை என்று அறிகிறோம். ஐந்திணைக்கும் ஐந்து உரிப்பொருள்கள் உண்டு. அவை புணர்தல், இருத்தல், இரங்கல், ஊடல், பிரிதல். இந்த ஐந்து உரிப்பொருள்களில் புணர்ச்சி மட்டும் தலைவன் – தலைவி இணைவிற்கானதல்ல. இருத்தலும் இரங்கலும் ஊடலும் பிரிதலும் தலைவன் – தலைவி இணைவை நோக்கியே அமைந்திருப்பவை. அதனால் அவையும் தலைவன் – தலைவி இணைவிற்கானவைதான். தலைவன் – தலைவி இணைவு என்பது இரு மனங்களின் இணைவு. அது பாலியல் உந்தல் உணர்வுவழி நிகழ்கிறது. இதனை, "நனவிலியின் ஆணையே அல்லது பாலியல் இச்சை உணர்ச்சியின் (Sexual Instinct) ஆணையே தலைவன் தலைவி என்போரின் காமக்கூட்டத்திற்குக் காரணமாகிறது" (நலங்கிள்ளி, 2019 :5) என்ற வரி உணர்த்துகின்றது.

பாலியல் உந்தல் உணர்வு குடும்ப அமைப்பு என்னும் உருவாக்கத்தை நோக்கி அமைந்திருக்கிறது. அதுவும் பெண்ணை முதன்மைப்படுத்தி அமைந்திருக்கிறது. எல்லா உருவாக்கத்தையும் தாயோடு இணைப்பது ஒருவகை மரபாகச் செயல்பட்டு வருகிறது. சான்று: பூமித்தாய், கடல்மாதா. ஃபிராய்டியத்தின் வாழ்விச்சை உணர்ச்சி வாழ்தல் என்னும் உருவாக்கத்தோடு தொடர்புடையது. அகமும் அவ்வேலையையே செய்கிறது.

‘ஃபிராய்டியம் இட் *(ID)* அதாவது இச்சை உணர்ச்சிகளான வாழ்விச்சை, சாவிச்சை உணர்ச்சிகளே வாழ்வின் அடிப்படை உணர்ச்சிகள் என்கிறது. அந்த வாழ்விச்சை உணர்ச்சியின் ஒரு பிரிவாக அமைவதுதான் பாலியல் உந்தல் உணர்ச்சி *(Libido)’* (நலங்கிள்ளி,2019:213). இது இருபதாம் நூற்றாண்டு கண்டுபிடிப்பு. ஆனால் இப்பாலியல் உந்தல் உணர்ச்சி அகமரபோடு நேரடியாகப் பொருந்தி வருகிறது. இதனை, “காதல், காமம், அன்பு, நட்பு, உதவி, ஆக்கம், கூட்டுறவு, தன்காதல், பிறர் மீதான காதல், தற்காப்பு மற்றும் இன்னபிற ஆக்கப்பணிகள் மற்றும் இதுபோன்ற நடத்தைகள் அனைத்தும் வாழ்விச்சை உணர்ச்சியின் வெளிப்பாட்டு நடத்தைகள் எனப் புரிந்துகொள்ளலாம்” (நலங்கிள்ளி,2019:210) என்னும் விளக்கம் உறுதிப்படுத்துகிறது. எனவே வாழ்விச்சை உணர்ச்சி = காமம் அதாவது அகமரபு என்ற சமநிலை கிடைக்கிறது. இது இருபதாம் நூற்றாண்டு சிந்தனை. உளவியல் காலம் காலமாக இருந்து வருகிறது. அதற்குப் பெயர் வைத்ததுதான் என்னுடைய வேலை என்று ஃபிராய்டே கூறுகிறார். அப்படியானால் பாலியல் உந்தல் உணர்ச்சி குறித்த அறிவு தமிழ் இலக்கிய மரபிற்கு இயல்பாகவே இருந்திருக்கிறது. அதனால்தான் காதல் என்றொரு அகஇலக்கியமரபு உருவாகியிருக்கிறது என்று உறுதிபடக் கூறலாம். “படைப்பாளன் என்பவன் தனது உண்மை வாழ்வில் நிறைவேறாமற்போன ஆசைகளைப் படைப்பில் வெளிப்படுத்தி நிறைவடைகிறான்” (நலங்கிள்ளி,2019:2). அப்படியென்றால் குழந்தைப்பருவத்தில் தீவிர பண்பாட்டு இறுக்கம் இருந்தால் மட்டுமே அகம் என்ற மரபு உருவாகியிருக்க முடியும். சங்க காலத்தில் அத்தகைய இறுக்கம் இருந்ததா? என்ற கேள்வி எழுகிறது. காரணம் ஐந்திணை அடையாளங்கள், மன்னரின் அடையாளங்கள், உரிப்பொருள் சார் உவமைகள், முதற்பொருள், கருப்பொருள் என அனைத்தும் இயற்கையோடு மிக நெருங்கி அமைந்திருப்பதால் ஆகும். இன்றைய நவீன வாழ்வு இயற்கையிலிருந்து விலகிய பண்பாட்டு ஆதிக்கம் மிகுந்த ஒரு வாழ்வு. இன்று அப்படி ஒரு மரபு உருவாகியிருப்பின் சந்தேகம் வாரா. உண்மையில், நாம் இன்றைய நிலையோடு அன்றைய நிலையை அப்படியே ஒப்பிட்டுப்பார்ப்பதன் விளைவே சங்ககாலத்தில் பண்பாட்டு இறுக்கம் குறைவு என்பது. சங்ககாலம் இயற்கையோடு இயைந்தகாலம் என்பதை, மு.வரதராசனாரின் சங்க இலக்கியத்தில் இயற்கை என்ற நூல் உணர்த்துகிறது. அத்தகைய இயற்கைச் சமூகத்தில் உண்டான கற்புநெறியும் மருதம் போன்ற ஒழுங்கமைக்கப்பட்ட சமூக அமைப்பும் உருவாகியிருக்கிறது என்று யோசித்தோமானால் அது எவ்வளவு பெரிய பண்பாட்டு இறுக்கம் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். கற்பு பண்பாட்டு இறுக்கம் என்பதால்தான் அதிலிருந்து சற்று விலகிய களவுநெறி உருவாகியிருக்கிறது. அகம் ஒரு பண்பாட்டுக் கட்டமைப்பு. அது இருகாரணங்களால் வாழ்விச்சை உணர்ச்சியின் நேரடிவெளிப்பாடாக அமைந்திருக்கிறது. ஒன்று இயற்கைச் சமூகத்தில் உருவான செயற்கையான பண்பாட்டுக் கட்டமைப்பு. இரண்டு செயற்கையான பண்பாட்டுக் கட்டமைப்பில் சரிபாதி அளவு பாதிப்பு செலுத்தி வந்த இயற்கை அமைப்பு. பண்பாட்டுக்

*கட்டமைப்பு நனவிலியை உருவாக்கியிருக்கிறது. அந்த நனவிலி தன்னை வெளிப்படுத்திக்கொள்ள விரும்பும். அதற்கு இயற்கைசார் சமூக அமைப்பு வழி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. அதனால்தான் வாழ்விச்சை உணர்ச்சி பண்பாட்டுணர்ச்சிக்கு ஏற்ப அகம் என்ற பொதுசமூக ஏற்புச் சொல்லைப் பயன்படுத்திக்கொண்டு பாடுபொருளில் தனது உணர்வான காமத்தை நேரடியாகப் பாடியுள்ளது. அதனால் அகம் = வாழ்விச்சை உணர்ச்சி என்று துணியலாம்.*

***சங்க புற இலக்கிய மரபும் உளவியலும்***

*மேற்சுட்டிய விளக்கங்கள் புற இலக்கியத்தை எவ்வாறு புரிந்துகொள்ளலாம் என்ற ஒரு கேள்வியை எழுப்புகிறது., "சாவிச்சை உணர்ச்சி என்பது 'அழிப்புணர்ச்சி' வெளிப்பாட்டு வடிவினது என்றும் இது வாழ்விச்சையின் நிறைவேற்றத்தைக் குலைக்கும் முயற்சியில் எப்போதும் இயங்கிக்கொண்டிருப்பது என்றும் இதனால்தான் வாழ்விச்சை உணர்ச்சி தனது நிறைவேற்றத்திற்காக ஓயாமல் போராடிக்கொண்டிருக்கிறது என்றும் எனவேதான் மனிதன் வாழ்க்கைப் போராட்டம் என்னும் நடத்தையின்வழித் தன்னை ஓயாது வருத்திக்கொண்டிருக்கிறான் அல்லது வதைத்துக்கொண்டிருக்கிறான் என்றும் ஃபிராய்டிய வழியில் புரிந்துகொள்ள முடிகிறது" (நலங்கிள்ளி,2019:210-211). அத்தகைய அழிப்புணர்ச்சி தன்வதைப்பு பிறவதைப்பு என இருவகையில் வெளிப்படும். புறப்பாடல்களில் போரினால் நிகழ்த்தப்படும் அழிவெல்லாம் பிறவதைப்பு வகையிலும் புகழுக்காகத் தன்னை அழித்துக்கொள்ளுதல், தான் உணவில்லாமல் இருத்தல் ஆகியவை தன்வதைப்பு வகையிலும் அடங்கும். எனவே புறமரபு = சாவிச்சை உணர்ச்சி எனப் புரிந்துகொள்ளலாம். வாழ்விச்சை உணர்ச்சிக்கு அகமரபு என்றால் சாவிச்சை உணர்ச்சிக்கு புறமரபு என்று கூறலாம். புறம் ஒரு பண்பாட்டுக் கட்டமைப்பு. அப்பண்பாட்டுக் கட்டமைப்பே அழிப்புணர்ச்சியோடு நேரடியாகப் பொருந்தி அமைவதற்குக் காரணம் இயற்கைசார் சமூக அமைப்போடு புறம் கொண்டிருக்கிற நெருக்கமான உறவாகும். சான்று: புறத்திணைகளுக்குரிய அடையாளப் பூக்கள் அனைத்தும் இயற்கை சார்ந்து அமைந்திருப்பது. இயற்கைவாழ் உயிரிகளிடம் அழிப்புணர்ச்சி இயல்பானதுபோல அது மனிதரிடமும் தொடர்கிறது. அதன் வெளிப்பாடே புறம். பண்பாட்டுணர்ச்சியின் பொது சமூக ஏற்புக்காக புறம் என்று வைத்திருந்தாலும் பாடுபொருளில் அழிப்புணர்ச்சி மேலோங்கி வெளிப்படுகிறது. சில இடங்களில் போர்ப்பாடல்களில் போருக்கு எதிர்ப்பான சிந்தனைகள் காணப்படுகின்றன. காரணம் பண்பாட்டுணர்ச்சியின் ஆதிக்கமாகும். எப்படியாயினும் புறம் இயற்கைசார் இணைவு வாழ்வியலை உள்ளடக்கி அமைந்திருப்பதால் சங்க கால வாழ்வியல் வெளிப்படையாக அழிப்புணர்ச்சியை வெளிப்படுத்தி அமைந்திருக்கிறது. எனவே புறம் = சாவிச்சை உணர்ச்சி எனத் துணியலாம்.*

*அகமரபிற்கு இணையாகப் புற மரபு எந்த அடிப்படையில் அமைந்திருக்கிறது? அகமரபும் புறமரபும் இச்சை உணர்ச்சிகள் என்னும் புரிதல் இருந்ததனால் அது*

நிகழ்ந்திருக்கிறது. இதை, "இச்சை உணர்ச்சிகள் பிரிந்து வெளிப்படா" (நலங்கிள்ளி, 2019:214) என்னும் கூற்று உறுதிப்படுத்துகிறது. அகம் என்றோ புறம் என்றோ இலக்கியம் தன்னை வெளிப்படுத்தவில்லையே? இலக்கணம்தானே கூறியது என்றால் இலக்கணம் இலக்கியத்திலிருந்து நிகழ்த்தப்பட்டிருப்பதால் இலக்கியம் எழுதுதலில் அவ்விதி செயல்பட்டிருக்கிறது என்பதுதானே பொருள். அகம்×புறம் சமூகத்தில் அரசவை வெளிப்பாடாக அமையாமல் இலக்கிய வெளிப்பாடாக ஏன் அமைந்தது? இலக்கியம் நனவிலிமன வெளிப்பாடுகள் என்ற ஃபிராய்டியக் கருத்தைக்கொண்டு பார்க்கும்போது நனவிலிமனமே நனவிலி மனத்தின் சிந்தனையான தன்னை வெளிப்படுத்திக்கொண்டுள்ளது எனக் கூறலாம். சங்கச் சமூகம் இயற்கையோடு மிக நெருங்கி அமைந்துள்ளமையால் அது சாத்தியமாகியுள்ளது. இயற்கையோடு இணைந்து வாழ்ந்த ஒரு சமூகம் இயல்பாக இயற்கை உணர்ச்சிகளின் அடிப்படையில் தன்னை வரையறுத்துக்கொண்டுள்ளது. அகம் புறத்தை அழிக்கவோ தன்வயப்படுத்தவோ புறம் அகத்தை அழிக்கவோ தன்வயப்படுத்தவோ எங்கேயும் முயன்றதாக இலக்கிய வரலாற்றில் பதிவாகவில்லை. மாறாக அகமும் புறமும் தன்னளவில் இயங்கிக்கொண்டே இருக்கிறது. இவ்வாறு தன்முனைப்பு (Ego) இல்லாமல் இயங்குவதற்குக் காரணம் அவை இச்சை உணர்ச்சிகளாக இருப்பதே ஆகும். இவை இரண்டும் இலக்கியத்தின் இருபிரிவுகள். இச்சை உணர்ச்சிகள் வாழ்விச்சை, சாவிச்சை இரண்டையும் இச்சை உணர்ச்சிகளாகவே பார்ப்பது போல இலக்கியம் அகம், புறம் இரண்டையும் இலக்கியமாகவே பார்க்கிறது. அதனால் அகம் புறத்தை அழிப்பதாகவோ புறம் அகத்தை அழிப்பதாகவோ வரலாற்றில் எங்கும் பதிவாகவில்லை. இங்கு இலக்கியம் = இச்சை உணர்ச்சிகள் என்ற சமன்பாடு கிடைக்கிறது.

**சங்க இலக்கிய 'அகம்×புறம்' மரபும் உளவியலும்**

பாலியல் உறவுச் செயல்பாடுகளில் ஏக்கம், அழுகை, துக்கம், வருத்தம், வலி இல்லையா? இருக்கிறது என்றால் அவை எல்லாம் சாவிச்சை உணர்ச்சி வகைப்பாட்டுக்குள் இடம்பெறாதா? போர் செய்கிறார்கள் என்றால் அது வாழ்வதற்காகத்தானே? அங்குக் காமம் இல்லையா? நட்பு இல்லையா? பிள்ளைபேறு இல்லையா? இருக்கிறது என்றால் அவை எல்லாம் வாழ்விச்சை உணர்ச்சி வகைப்பாட்டுக்குள் இடம்பெறாதா? சுருக்கமாகச் சொல்வதென்றால் இரண்டிலும் இரண்டுமே இல்லையா? இருக்கிறது என்றால் 'அகம்×புறம்' பிரிவு எப்படி சாத்தியம்? "சங்க இலக்கியத்தின்வழி அறியலாகும் கைக்கிளை முதலா பெருந்திணை ஈறாக உள்ள அகப்பொருள் பாடல் ஒழுகலாறுகளும் வெட்சி முதலா பாடாண் ஈறாக உள்ள புறப்பொருள் பாடல் ஒழுகலாறுகளும் வாழ்விச்சை மற்றும் சாவிச்சை உணர்வுகளின் கூட்டு வெளிப்பாடுகள்தாம்" (நலங்கிள்ளி, 2019:228-229) என்ற விளக்கமும், "சங்க இலக்கியப் போர்ப்பாடல்களில் இடம்பெற்றுள்ள சீற்றம், சீரழிப்பு ஆகிய வடிவங்களில் வெளிப்பட்டவை சாவிச்சை உணர்வுமன பிறர்வதைப்புமன வெளிப்பாடுகள்தாம்

என்றாலும் கூட அங்கும் தற்காப்புணர்ச்சி என்ற வாழ்விச்சை உணர்ச்சியின் பங்கும் உள்ளது என்பது அறியத்தக்கது. அதேபோல சங்க அகப்பாடல்கள் வழி நாம் அறியலாகும் பிரிவுப்பொருண்மைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள அகப்பாடல் மாந்தர்கள் அனைவரின் துன்ப உணர்வுகள் என்பவை தன்வதைப்பு என்னும் சாவிச்சை உணர்வினின்று வடிகின்ற உணர்வுகள்தாம் என்றாலும்கூட அங்கும் வாழ்விச்சை உணர்வின் நோக்கமும் அடங்கியுள்ளது என்பதையும் நாம் நினைவுகொள்ள வேண்டும்" (நலங்கிள்ளி, 2019 : 215-216) என்ற விளக்கமும் அகத்தில் புறமும் புறத்தில் அகமும் உண்டு என்று கூறுகின்றன. பொதுவாகவே அகத்தில் புறக்கூறுகள் புறத்தில் அகக்கூறுகள் என்ற வாதமும் ஆய்வும் பல ஆண்டுகளாகவே நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டிலும் இரண்டுமே உள்ளது என்றால் தனித்தனிப் பெயரால் ஏன் அழைக்கப்படவேண்டும். இக்கேள்விக்கு திணை அமைப்பு முறையில் இருந்தே பதில் கூற முடியும். ஐந்து நிலத்திலும் புணர்ச்சி சாத்தியம். அப்படியிருக்கையில் குறிஞ்சி நிலத்திற்கு மட்டுமே புணர்ச்சி உரியதாக வகைப்படுத்தப்பட்டிருப்பது சரியா? நிலம், காலம் ஆகியவற்றின் அடிப்படையில் சிறப்பு கருதி அவ்வகைப்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதுபோலவே ஆக்குதல் × அழித்தல் என்னும் முதன்மைச்செயல்கள் கருதி அகம்×புறம் வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் தொல்காப்பியம் ஏழு அகத்திணைக்கும் ஏழு புறத்திணைகளை (...வெட்சிதானே குறிஞ்சியது புறனே?.. - தொல்.பொருள்.59.) இணைத்தும் கூறியிருக்கிறது. இவை இன்னும் விளக்கப்படாத இடைவெளிகளைக் கொண்டுள்ளன. நலங்கிள்ளி அவர்களும் உளப்பகுப்பாய்வியல் சிந்தனை அடிப்படையில் அதாவது இச்சை மற்றும் இடிப்பஸ் உணர்வு அடிப்படையில் அகம்×புறம் இணைவை விளக்கியுள்ளார். (பார்க்க: சங்க இலக்கியம்:ஒரு ஃபிராய்டிய உளப்பகுப்பாய்வு வாசிப்பு). எனவே 'அகம்×புறம்' பிரிவு என்பது ஒரு சிறப்பு கருதியே. மேலும் வாழ்விச்சை உணர்ச்சியும் சாவிச்சை உணர்ச்சியும் பிரிந்தும் அமையக்கூடியது; இணைந்தும் அமையக்கூயது என்பதற்குத் தொல்காப்பியம் சுட்டிருக்கும் இணைப்பே பொருத்தமான சான்றாகும். 'அகம்×புறம்'வேறானது என்பது காம உணர்ச்சி, அழிப்பு உணர்ச்சி என்ற முதன்மைக் கூறுகளால் ஆகும். 'அகம்×புறம்' இணைந்து அமைந்திருப்பது இரண்டுமே உயிரியலின் அடிப்படை உணர்ச்சிகள் என்பதால் ஆகும்.

**பிற இலக்கிய வகைமைகளில் 'அகம்×புறம்' மரபும் உளவியலும்**

பக்தி இலக்கியத்தில் அகம் கடவுள் மீதான காமமாகவும் புறம் கோவில் வழிபாட்டிற்காகப் பாடுதலாகவும் உழைத்தலாகவும் (தன்வதைப்பு) வெளிப்படுகின்றன. சித்தர் இலக்கியத்தில் அகம் உருவமற்ற கடவுளைக் காதலிப்பதாகவும் புறம் சமுதாயச் சீர்கேடுகளைக் களைவதாகவும் (தன்வதைப்பு) வெளிப்படுகின்றன. சிற்றிலக்கியத்தில் அகம் காதலாகவும் புறம் போராகவும் (பிறவதைப்பு) சமூகச் செயலாகவும் (தன்வதைப்பு)

வெளிப்படுகின்றன. நவீன இலக்கியத்தில் அகம் உள்ளத்தை அறிதலாகவும் (மன உணர்வு) புறம் சமூகத்தை அறிதலாகவும் (தன்வதைப்பு, பிறவதைப்பு) சமூகத்தை மாற்றுவதாகவும் (தன்வதைப்பு, பிறவதைப்பு) புரட்சிசார் செயலாகவும் (தன்வதைப்பு, பிறவதைப்பு) வெளிப்படுகின்றன. மேலும் அகத்தையும் புறத்தையும் தொல்காப்பியம் இணைத்துப் பார்ப்பது போல நவீன இலக்கியம் அகத்தையும் புறத்தையும் இயங்கியலாகப் பார்க்கிறது.

**முடிவுரை**

அனைத்து இலக்கிய வகைமையிலும் அகம் உள்ள வெளிப்பாடாகவும் புறம் தன்னை அழித்துக்கொள்வதாகவும் பிறரை அழிப்பதாகவும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. மனிதன் இருக்கும் வரை மொழியும் மொழி இருக்கும் வரை இலக்கியமும் இலக்கியம் இருக்கும் வரை அகமும் புறமும் இருக்கும். ஏனென்றால் தமிழ் இலக்கிய மரபு இச்சை உணர்ச்சிகளை அடிப்படையாகக்கொண்டது. இச்சை உணர்ச்சியின் இரண்டு முகங்களாக அகமும் புறமும் இருப்பதால் இலக்கியத்தின் பிரிவுகளான அகமும் புறமும் தொடர்ந்துகொண்டேதான் இருக்கும்.

**துணைநூற்பட்டியல்**


1. சிவலிங்கனார், ஆ. (தொ.ஆ)., 2015அ: **தொல்காப்பியம் – பொருளதிகாரம் (உரைவளம்) களவியல்**, மீள்பதிப்பு, கோ.விசயராகவன் (ப.ஆ.), சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
2. ...., 2015: **தொல்காப்பியம் – பொருளதிகாரம் (உரைவளம்) பொருளியல்**, மீள்பதிப்பு, கோ.விசயராகவன் (ப.ஆ.), சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
3. ...., 2015: **தொல்காப்பியம் – பொருளதிகாரம் (உரைவளம்) அகத்திணையியல்**, மீள்பதிப்பு, கோ.விசயராகவன் (ப.ஆ.), சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
4. ...., 2015: **தொல்காப்பியம் – பொருளதிகாரம் (உரைவளம்) கற்பியல்**, மீள்பதிப்பு, கோ.விசயராகவன் (ப.ஆ.), சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
5. ...., 2015 - 2016: **தொல்காப்பியம் – பொருளதிகாரம் (உரைவளம்) செய்யுளியல் பகுதி** 4, மீள்பதிப்பு, கோ.விசயராகவன் (ப.ஆ.), சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
6. சுப்புரெட்டியார், ந., 1981: **அகத்திணைக் கொள்கைகள்**, சென்னை: நாவல் கலைப் பதிப்பகம்.
7. நலங்கிள்ளி, அரங்க., 2019: **சங்க இலக்கியம் : ஒரு ஃபிராய்டிய உளப்பகுப்பாய்வு வாசிப்பு**, சென்னை : பரிசல் புத்தகநிலையம்.
8. ராஜ்கௌதமன், 2019 : **பழந்தமிழ் அகவல் பாடல்களில் பரிமாற்றங்கள்**, சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
9. கு.வெ. பாலசுப்பிரமணியம் உள்ளிட்ட சிலர் (ப.ஆ.): **சங்க இலக்கியம் தொகுதிகள்**: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.